**Crl.M.P.No.165/2026**

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.06.2026</u>**

**சாட்சி –2**

**பெயர் – பன்னீர்செல்வம் (52) த/பெ. ராமசாமி, மணிம்பட்டு**

**1.** கடந்த 16.02.2026 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் வல்லம் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அங்கு சத்தம் கேட்டபோது என்னவென்று பார்த்தபோது வல்லம் வட்டாச்சி அலுவலர் சிலம்பு செல்வம் என்பவர் ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை என்பவரை பார்த்து திட்டிக்கொண்டிருந்தார். என்வென்று விசாரித்தபோது அண்ணாதுரை கலைஞர் கனவு இல்லத்தின் கீழ் கொடுக்கப்படும் தொகுப்பு வீடுகளுக்கான தகுதி வாய்ந்த நபர்களின் பட்டியலை அலுவரிடம் கேட்டதாகவும், அதற்கு அவர் மேற்படி அலுவலர் வருவோர் போவோருக்கு எல்லாம் பட்டியலை கொடுக்க வேண்டுமா என கூறி திட்டிக்கொண்டிருந்ததார். அதற்கு அண்ணாதுரை என்பவர் ஒன்றிய செயலாளர் என்பதால் கேட்கிறேன் என்று கூறினார். அதற்கு மேற்படி அலுவலகர் அண்ணாதுரையை பார்த்து ஆபாசமாக பேசி மேலும், வெட்டிவிடுவேன் என மிரட்டினார். அதன் பின்னர் அங்கிருந்து நான் வெளியே வந்துவிட்டேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.